### டெல்லி சிறப்புப் பிரதிநிதியாக கன்னடரை நியமனம் செய்வதா?

# தமிழக அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்!

## ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் அறிக்கை!

ஈரோடு, ஜூன் 30-

டெல்லியில் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதியாக திரைப்படத் தயாரிப்பாளர் கே.வெங்கட் நாராயணன் நியமிக்கப்பட்டிருப்பது மக்கள் நலனைவிட தனிப்பட்ட விசுவாசத்திற்கு முன்னுரிமை அளிப்பதை வெளிப்படுத்துவதாக ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “டெல்லியில் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி என்பது மாநிலத்தின் உரிமைகளை மத்திய அரசிடம் வலியுறுத்தி, முக்கிய திட்டங்களுக்கு அனுமதி பெற்றுத் தரும் உயரிய பொறுப்பாகும். அமைச்சரவை அந்தஸ்துக்கு இணையான இப்பதவிக்கு அரசியல் மற்றும் நிர்வாக அனுபவம் கொண்டவர்களே நியமிக்கப்பட வேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

“ஏற்கனவே முதலமைச்சருக்கு நெருக்கமானவர் எனக் கூறப்பட்ட ஒருவருக்கு அரசுப் பொறுப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து எழுந்த கடும் எதிர்ப்பால் அந்த நியமனம் திரும்பப் பெறப்பட்டது.

பின்னர் திரைப்படத் துறையைச் சேர்ந்த மற்றொருவர் அரசியல் ஆலோசகராக நியமிக்கப்பட்டது குறித்த தகவலும் தாமதமாகவே பொதுமக்களின் கவனத்திற்கு வந்தது. தற்போது நடிகர் விஜய் நடித்த திரைப் படத்தைத் தயாரித்த தயாரிப்பாளருக்கு மாநிலத்தின் மிக முக்கியமான பிரதிநிதித்துவப் பொறுப்பு வழங்கப்பட்டிருப்பது, அரசின் நியமனங்களில் தகுதி மற்றும் அனுபவத்தை விட தனிப்பட்ட நெருக்கமே முக்கியப் பங்கு வகிக்கிறதா? என்ற கேள்வியை எழுப்புகிறது”

**தமிழக நலனுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்!**

மேகதாது அணை விவகாரம் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் நிலுவையில் உள்ள நிலையில், கர்நாடகாவுடன் நெருங்கிய தொடர்புடைய ஒருவரை தமிழகத்தின் பிரதிநிதியாக நியமித்திருப்பது மாநில நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். மேலும், டெல்லியின் நிர்வாக அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து மாநிலத்தின் கோரிக்கைகளை வலியுறுத்த அரசியல் மற்றும் நிர்வாக அனுபவம் அவசியம் என்றும், தற்போதைய நியமனம் அந்த அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்கிறதா என்பது சந்தேகத்திற்குரியதாகியுள்ளது.

ஜி.எஸ்.டி. நிலுவைத் தொகை, பேரிடர் நிவாரண நிதி, நதிநீர் உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பிரச்சினைகளில் தமிழகம் மத்திய அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய சூழலில் உள்ளது. மாநில நலனுடன் தொடர்புடைய முக்கியப் பதவிகள் அனைத்தும் வெளிப்படைத்தன்மை, அனுபவம் மற்றும் நிர்வாகத் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும். தமிழக அரசு இந்த நியமனத்தை உடனடியாக மறுபரிசீலனை செய்து, மாநில நலனை முன்னிறுத்தும் தகுதியும் அனுபவமும் கொண்ட ஒருவரை டெல்லி சிறப்புப் பிரதிநிதியாக நியமிக்க வேண்டும் என கே.இ.பிரகாஷ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பசுமைப் போராளி — மருத்துவர்

# சத்தியசுந்தரி அம்மா மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, ஜூன். 30-

பசுமைப் போராளி - மருத்துவர் சத்தியசுந்தரி அம்மா அவர்கள் மறைவு செய்தி அறிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-



பசுமைப் போராளியும், சிறந்த மகப்பேறு மருத்துவருமான சத்தியசுந்தரி அம்மா அவர்களின் மறைவுச் செய்தியறிந்து மிகவும் துயருற்றேன். இயற்கையின் மடியில் மீளாத் துயில் கொள்ளும் அந்த இயற்கைப் பாதுகாவலரின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1980 களில் பவானி ஆற்றைப் பாழாக்கிய விஸ்கோஸ் ஆலைக்கு எதிராக, எவ்வித மிரட்டல்களுக்கும் அஞ்சாமல் மக்களைத் திரட்டி அவர் நடத்திய சட்டப் போராட்டமும், களப் போராட்டமும் இன்றும் மக்களால் நினைவு கூரப்படுகிறது.


சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்த சத்தியசுந்தரி அம்மா அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர் உறவினர்கள் சூழலியல் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# தேர்தல் களத்தை தனியே சந்திப்பதுதான் வெற்றிக்கான வழித்தடமாக அமையும்!!

கழகத்தலைவர் தளபதியார் அவர்கள் சமீபத்தில்திருவாரூரில்முன்னாள்அமைச்சர்கழகத்தின்செயல்வீரர் உ.மதிவாணன் அவர்கள் இல்லத்திருமண நிகழ்ச்சியில் உரையாற்றும் பொழுது, இன்றைய அரசியல்மாறுபட்டசூழ்நிலையில்கழகச்செயல்வீரர்களின்கவனத்தை ஈர்க்கும் வகையில் தேர்தல் குறித்த ஒருகருத்தை பரிசீலிப்பதாக அறிவித்துள்ளார்கள். இனிவரும்தேர்தல்களத்தில்எந்தவடிவத்திலும் அரசியல்கட்சிகளின்கூட்டணிதேவையில்லை என்றகழகத்தவர்களின் கோரிக்கையை பரிசீலிப்பதாகத்தெரிவித்துள்ளார்கள். இந்தகோரிக்கையைபரிசீலிக்கவேண்டும்என்றவேண்டுகோளை வலியுறுத்தும் நோக்கில் அதற்கான காரணங்களையும், காலமாற்றத்தின்தாக்கங்களையும், மக்களின் எதிர்பார்ப்புகளையும் இந்தக் கட்டுரையின் மூலம் விளக்கிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் அரசியல் களத்தில், இந்திய அரசியல் சட்டம் 1949 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டு,1950ஆம்ஆண்டுஜனவரித் திங்கள் 26 ஆம் நாள் குடியரசு தினத்தன்றுஅமலுக்குவந்தது. அந்தஅடிப்படையில் 195219571962ஆகியஆண்டுகளில்நாடாளுமன்றத்திற்கும்,சட்டமன்றங்களுக்கும்தேர்தல்கள் நடைபெற்றது. பின்னர் 1967ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெற்ற சட்டமன்றத்தேர்தலில்திராவிடமுன்னேற்றக் கழகம் கூட்டணிக்கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சியக் கம்யூனிஸ்ட் கட்சி, சுதந்திராக் கட்சி, பார்வர்டு பிளாக், இந்திய யூனியன் முஸ்லிம்லீக் கட்சி, பிரஜா சோசலிஸ்ட் கட்சி, சம்யுக்தா சோசலிஸ்ட்கட்சிஆகியஅரசியல்கட்சிகளுடன் கூட்டணி அமைத்து வெற்றிபெற்று பேரறிஞர் அண்ணா தலைமையில் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி அமைந்தது. இந்தத் தேர்தலில் தான் திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முதலாக தேர்தலில், காங்கிரஸ்கட்சிக்குஎதிரான வாக்குகள் சிதறாமல் இருக்க வேண்டுமென்பதற்காகவும், காங்கிரஸ் கட்சியின் எதேச்சதிகாரப்போக்கை தடுக்கும் கட்டாய சூழ்நிலையில் உருவாக்கப் பட்டதுதான் தமிழகத்தில் உதயமான முதல் தேர்தல் கூட்டணியாகும்.



**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
உயர் நிலை
செயல் திட்டக்குழு உறுப்பினர்

இந்த அரசியல் தேர்தல் கூட்டணி உருவாவதற்கு காரணம் காங்கிரஸ் கட்சி ஆட்சியின் எதேச்சதிகாரமக்கள்விரோதநடவடிக்கைகள் தான் என்பதை அனைத்து அரசியல் கட்சிகளும்உணர்ந்திருக்கிறது. மேலும், அன்றைய அரசியல் காலக்கட்டத்தில் நாடு விடுதலைப் பெற்றப்பின்னர், காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சி திசைமாறிச் சென்றதாலும், தமிழ்நாட்டைப்பொருத்தமட்டில், “இந்தி”மொழியைஆட்சிமொழியாக திணிக்க முற்பட்டமையாலும், தேசியமையக்கொள்கையில், காங்கிரஸ்கட்சி பெரும் முதலாளிகளுக்கு சாதகமாக இருந்தமையாலும், மக்கள் விரோத காங்கிரஸ் கட்சியை தேர்தலில் தோல்வியடையச் செய்ய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் அனைத்து எதிர்க்கட்சிகளும் தமிழ்நாட்டில் ஒன்றிணைந்தன.

இதற்கு முன்னர் 1952 1957 1962 ஆகிய தேர்தல்களில் காங்கிரஸ் கட்சிக்கு எதிர்ப்பான வாக்குகள்சிதறிக் கிடந்தமையால், காங்கிரஸ் கட்சியைஅந்ததேர்தல்களில்தோற்கடிக்கஇயலவில்லை என்பதை கடந்தகால அனுபவத்தின் அடிப்படையில், அறிந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் காங்கிரஸ் எதிர்ப்பு உணர்வைஒன்றுதிரட்டும்வகையில், காங்கிரஸ் கட்சிக்கு எதிர்ப்பான அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்துதேர்தல்கூட்டணிஅமைத்தார்கள்.

அன்றையக்காலகட்டத்தில்மக்கள்விரோத அரசாக மாறிவிட்ட காங்கிரஸ் கட்சியின் ஆட்சியைஅப்புறப்படுத்தப்படவேண்டும்என்பதே பேரறிஞர் அண்ணா தலைமையில் அமைக்கப்பட்ட தேர்தல் கூட்டணியின் முக்கியமான நோக்கமாகும். மக்கள் நலனுக்கும், மாநில உரிமைகளுக்கும், இந்தி திணிப்பிற்கும் எதிரான காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சி அப்புறப்படுத்தப்படவேண்டியதுதலையாயதேசிய கடமைஎன்றஅடிப்படையில்தான் அன்றைய தினம் தேர்தல் கூட்டணி உபயமானது.

இதனைத் தொடர்ந்து 1971இல் பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பின்னர், முத்தமிழறிஞர்கலைஞர்அவர்கள்முதலமைச்சராக இருந்த பொழுது, இந்திய ஒன்றியத்தின் புரட்சிகரமான “மன்னர்மானிய ஒழிப்பு”, “வங்கிகள் தேசியமையம்”என்றபுரட்சிகரமானசமதர்மக் கோட்பாட்டை ஆதரிக்கும் நோக்கத்தின் அடிப்படையில், 1972 ஆம் ஆண்டு நடைபெற வேண்டிய சட்டமன்றத்திற்கான தேர்தலை, முன்கூட்டிஎதிர்கொள்ளும்வகையில்சட்டமன்றத்தை கலைத்துவிட்டு1971ஆம் ஆண்டுதிருமதி. இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியோடு கூட்டணி அமைத்து 184 சட்டமன்ற தொகுதிகளில் வெற்றி பெற்று வரலாறு படைத்தார்.

அன்றைய காலகட்டத்தில் புரட்சிகரமான “தேசியமையக் கொள்கையும்”, “மன்னர்மானியஒழிப்பும்”தேர்தல்கூட்டணிக்குஅடித்தளமாக அமைந்தது.

இதனைத் தொடர்ந்து 1977இல் “மிசா” காலக்கொடுமைகளைஎதிர்கொண்டதிராவிட முன்னேற்றக் கழகம் எம்.ஜி.ஆரால் தொடங்கப்பட்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து தேர்தல்களத்தில் வெற்றி வாய்ப்பைஇழந்தது. இந்தத்தேர்தலில்தேர்தல் கூட்டணி என்பது ஒரு பொருட்டாக கருதப்படவில்லை. எம்.ஜி.ஆரின்கவர்ச்சிஅரசியல், பிற அரசியல் சக்திகளை புறந்தள்ளிவிட்டது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற நாடாளுமன்ற சட்டமன்றத் தேர்தல்களில், தேர்தல்கால கூட்டணி என்பது வாடிக்கையான ஓர் அரசியல் நடவடிக்கையாக அரசியல் தேர்தல்களத்தில் மாற்றப்பட்டுவிட்டது. குறைந்தபட்சபொதுத்திட்டத்தின் அடிப்படையில் (Common Minimum Programmes) அமைக்கப்பட்ட தேர்தல் கூட்டணிகளின்கொள்கைவரையறைபடிப்படியாக கரைந்துபோய்விட்டது. இத்தகைய அரசியல் நிகழ்வுகளுக்குப் பின்னர், “ஆட்சியிலும் அதிகாரத்திலும் பங்கு” என்ற நிலைப்பாட்டில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்று கூட்டணி ஆட்சி அமைத்திருக்கிறது. எனவே கொள்கை அடிப்படையில், குறைந்தபட்ச பொதுத்திட்டங்களின்அடிப்படையிலும், கடந்தகாலத்தில்உருவாக்கப்பட்ட தேர்தல் கூட்டணி என்பது முற்றிலும்மறைந்துபோனநிலையில், மக்களுடைய மனோபாவம் பிரதான அரசியல் கட்சியின் கொள்கை கோட்பாடுகள் திட்டங்கள் ஆகியவற்றை நோக்கித்தான் பொது மக்களின் கவனம் ஈர்க்கப் படுகிறது.

அந்த அடிப்படையில்தான் வாக்காளர்கள் தங்கள் முடிவுகளை மேற்கொள் கின்றனர். எனவே, இனிவரும்காலங்களில்தேர்தல்கூட்டணி என்கின்ற அரசியல் ஏற்பாட்டை தவிர்த்துவிட்டு சுதந்திரமாக இயக்கம் ஏற்றுக்கொண்டுள்ள சித்தாந்தங்களின் அடிப்படையில், திட்டங்களை மக்களின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் முன்வைத்து அவற்றை பிரச்சாரங்களின் மூலமாகவும், நவீன அரசியல்சாதனங்கள்மூலமாகவும்மக்களுக்கு செய்திகளைக் கொண்டு சேர்த்தால் போதும்என்றேதோன்றுகிறது. அதுமட்டுமல்ல, இன்றையஅறிவியல்சாதனங்கள் உச்சம் தொட்ட நிலையில் எந்த அரசியல் கருத்துக்களானாலும், மக்களைக்கூட்டி, அவர்களுக்கு முன்னால் கொள்கைக் கோட்பாட்டு திட்டங்களையும் விளக்குவதைவிட நவீன அரசியல் சாதனங்களான“வாட்ஸ்ஆப்”, “இன்ஸ்டாகிராம்”, “ரீல்ஸ்”, “வீடியோ” ஆகிய அறிவியல்தொடர்புசாதனங்கள் மூலம் மக்களுக்கு கொண்டு சேர்த்து விடலாம் என்பதே இன்றைய எதார்த்தம்.

எனவே, இன்றையஅறிவியல்கண்டுபிடிப்புகள்உச்சம்தொட்டவாழ்வியல்களத்தில்தேர்தல் காலங்களில் கூட்டணி வைத்து தான் கொள்கை பிரச்சாரம் செய்து மக்களின் மனங்களைவென்றிடவேண்டும்என்றஅவசியமோ, நிர்ப்பந்தமோ இல்லை மாறாக அரசியல் கூட்டணியோ அல்லது மக்களை ஓரிடத்தில் கூட்டுவது என்கின்ற முறைகளையும் தாண்டி ஒவ்வொரு இல்லங்களில் உள்ள ஒவ்வொரு தனிநபரையும்இந்தஅறிவியல்சாதனங்கள்மூலம் நேரடியாக சந்திப்பதற்கான அறிவியல் சாதனங்கள்மூலமானநவீனஏற்பாட்டைவிரைந்து மேற்கொண்டு கூட்டணி அரசியலை புறந்தள்ளிவிட்டு அறிவியல் சாதனங்கள் மூலம் ஒவ்வொரு இல்லத்தில் உள்ளவர்களின் உள்ளத்தை தன் பக்கம் திருப்புவதன் மூலம் கூட்டணி இல்லாத, கொள்கையை அடித்தளமாககொண்டஇந்தமாற்றங்களைஉருவாக்க திராவிடமுன்னேற்றக்கழகம்தனித்துநின்றே வெற்றியினை ஈட்ட முடியும் என்பதே திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் வேட்கையும், விருப்பமுமாகும்!!

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காட்டம்பட்டி கா.கந்தசாமி
### ஜூன் 30 (2018)



கழகம் தொடங்கிய நாள் முதல் உறுப்பினராகி, கழகப் பணியாற்றியவர்.

1989–ல் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

மூன்று முறை காட்டம்பட்டி ஊராட்சி தலைவராகவும் – கிணத்துகடவு வட்டார நிலவள வங்கி தலைவராகவும் – கோவை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராகவும் – மாநில கூட்டுறவு வங்கி இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### பொய்யும் –புரட்டுக்களும் நிறைந்த ரீல்ஸ் ஆட்சியை அகற்றி

# திராவிடமாடல் ஆட்சி மீண்டும் அமைய பாடுபடுவோம்!

## திருத்துறைப்பூண்டி Gen Z சந்திப்பு கூட்டத்தில் இளைஞர்கள் சூளுரை!

திருவாரூர், ஜூன் 30 -

திருத்துறைப்பூண்டி தொகுதிக்குபட்ட இளைஞர்கள் தன்னெழுச்சியாக ஒன்று திரண்டு நடத்திய Gen Z சந்திப்புக்கூட்டம், மேட்டுப்பாளையம் ஜெஸ்டினா திருமண அரங்கில் எழுச்சியோடு நடைபெற்றது. கூட்டத்தில் திருத்துறைப்பூண்டி தொகுதிக்குட்பட்ட இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

திருத்துறைப்பூண்டி தொகுதிக்கு உட்பட்ட இளைஞர்கள் பங்கேற்ற GenZ இளைஞர்கள் சந்திப்புக் கூட்டம் எழுச்சியோடு நடைபெற்றது. கூட்டத்தினை திருத்துறைப் பூண்டி ஒன்றிய இளைஞர்அணி அமைப்பாளர் வெங்கடேஷ்குமார், முகமது முஸ்தாக் உள்ளிட்டோர் ஒருங்கிணைத்து நடத்தினர்.

கூட்டத்தில் திமுகவின் இளம் பேச்சாளர்கள், விக்னேஷ்வரி தி.தினேஷ், இரா.பிரீத்தி, ஜெ.பூந்தளிர், மா.மாதவன் உள்ளிட்டோர் பங்கேற்று திராவிட இயக்க வரலாறு பற்றியும், முத்தமிழ் அறிஞர் கலைஞர், திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் இளைஞர்களின் எதிர்கால நம்பிக்கை உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் அர்ப்பணிப்பு அரசியல் மற்றும் தி.மு.கழக பொற்கால ஆட்சியில் செய்த சாதனைகளைப்பற்றியும் எடுத்துக்கூறினர்.

மேலும் கூட்டத்தில் திராவிட இயக்க வரலாறு ,கழக ஆட்சியின் சாதனைகள், கழக வரலாறு குறித்த வினாடிவினா நிகழ்வுகளும், பொய்யும் -புரட்டுக்களும் நிறைந்த இந்த ரீல்ஸ் ஆட்சியை அகற்றி கழக ஆட்சி விரைவில் அமைய இளைய சமுதாயத்தினர் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் விரிவாக கருத்து பரிமாற்றங்கள் நடைபெற்றது.

தற்போது நடைபெறும் ரீல்ஸ் ஆட்சியில் அரைவேக்காட்டு அமைச்சர்களின் உலறல்களையும் அதனால் மக்கள்படும் வேதனைகளையும் எடுத்துக்கூறியதோடு, கழக ஆட்சி மீண்டும் அமைய பொதுமக்கள் ஆவலோடு காத்திருக்கும் நிலையறிந்து, அடுத்த கட்ட ஆக்க பணிகளை இளைஞர்கள் எவ்வாறு மேற்கொள்வது எனவும் விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டு முடிவு கள் எடுக்கப்பட்டது.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பில் ஏ.வி.பி.வீரராகவன், இள.இளவரசன், ஜெ.அறிவுடைநம்பி, ப.தெய்வநாயகி ஆகியோர் உறுதுணையாக இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துறையூர் க. மகாராசன்
### ஜூன் 30 (2014)



இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

துறையூர் நகரத்தில் மாவட்ட பிரதிநிதியாகவும், அதன் பின்னர் இருபத்தோறு ஆண்டுகள் தொடர்ந்து நகரக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

1986–ல் நகர்மன்றத் தலைவராகவும், 2006–ல் நகர்மன்ற துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**